ஸ்ரீ:

விகாரி ஷு கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2019

மலர்: 2
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





விகாரி ஸூ கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2019

ஸ்ரீ:

மலர்: 2
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri P.S. Anand & Sri K. Akash
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

ஐப்பசி மாதத்தில் முதலாழ்வார்கள் அவதரித்து ஏற்றியருளிய தீபத்தை அணையாமல் காத்து, பர்க்கோ தேவஸ்ய என்னும் கணக்கிலே பகவானை ஜ்யோதிரூபமாக மாதம் முழுதும் ஆராதிப்பதும்; அர்ச்சையின் பெருமையைப் போற்றுவதிலே நோக்குள்ள ‘அறிவுதரும்’ பாக்களைப் பாடிய எழிற்குரையல் வரு கலியனின் அவதாரத் திருநாளாம் கார்த்திகையில்-கார்த்திகையன்று திருக்கோயில்களிலும் / திருமாளிகைகளிலும் விசேஷமாகக் கொண்டாடுவதும் மரபு. ‘என்று கொலோ களிக்கும் நாளே’ என்றில்லாமல், இன்றே உத்தானம்செய்து உகக்க வந்து தோன்றும் இத்திங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

நிற்க, இம்மாத ஸஞ்சிகையில் நாம் அநுபவிக்கவிருப்பது :

❖ கீழ்க்கண்ட உத்ஸவங்களின் புகைப்படங்கள் :

✓ திருப்பவித்ர உத்ஸவம்

✓ தீபாவளி உத்ஸவம்

✓ ஸேனை முதலியார் உத்ஸவம்

✓ முதலாழ்வார்கள் – சிறப்பாக பேயாழ்வார் வார்ஷிகோத்ஸவம்

இவைகளுடன் விசேஷ வ்யாஸங்கள்.

வழக்கமான கார்த்திகை மாத உத்ஸவப் பட்டியல், பஞ்சாங்கம், சிறுவர் பகுதி இவைகளும் இடம் பெறுகின்றன.

இரண்டு இதழ்களாக தொடர்ந்துவரும் ஆங்கிலக் கட்டுரைப் பகுதி, இதிலும் தொடர்கிறது. வாசகர்களின் கருத்துக்களை ஆவலுடன் வரவேற்கிறோம்,

கண்டு வாசித்து இன்புறுமின்.

# விகாரி வருட கார்த்திகை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| நவம்பர் / டிஸம்பர் | கார்த் திகை | | | | | |
| 17.11.19 | 1 | பஞ்சமி | ஞாயிறு | புனர்வஸு | மாதப்பிறப்பு – பெருமாள் திருமஞ்சனம், மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.E. ஸ்ரீநிவாசன் |
| 18.11.19 | 2 | ஷஷ்டி | திங்கள் | புஷ்யம் | திருமால்வடை | |
| 19.11.19 | 3 | ஸப்தமி | செவ்வாய் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 20.11.19 | 4 | அஷ்டமி | புதன் | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 21.11.19 | 5 | நவமி | வியாழன் | பூரம் | ஆண்டாள் | |
| 22.11.19 | 6 | தசமி 02.26 (6.58 AM) / ஏகாதசி 54.10 | வெள்ளி | உத்தரம் | தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். உள்புறப்பாடு | |
| 23.11.19 | 7 | ஏகாதசி (2.26) / த்வாதசி (51.06) | சனி | ஹஸ்தம் | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 1ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ D.S. ராஜகோபால் |
| 24.11.19 | 8 | த்ரயோதசி | ஞாயிறு | சித்திரை | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 2ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ N.S. வரதாச்சாரி |
| 25.11.19 | 9 | சதுர்தசி | திங்கள் | ஸ்வாதி | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 3ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ K.L.N. ராகவன் |
| 26.11.19 | 10 | அமாவாசை | செவ்வாய் | விசாகம் | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 4ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 27.11.19 | 11 | ப்ரதமை | புதன் | அனுஷம் | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 5ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 28.11.19 | 12 | த்விதீயை | வியாழன் | கேட்டை | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 6ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம் | A.S.V. சாரிடீஸ் – ஸ்ரீ A.V. ஸ்ரீநிவாசன் |
| 29.11.19 | 13 | த்ருதீயை | வெள்ளி | மூலம் | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 7ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ L.V. நரசிம்ஹன் |

ஸ்ரீ:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30.11.19 | 14 | சதுர்த்தி | சனி | பூராடம் | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 8ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீமதி கமலா கிருஷ்ணஸ்வாமி குடும்பத்தினர்., ஸ்ரீமதி வசந்தா வாசுதேவன் – திருமஞ்சனம் மட்டும் |
| 01.12.19 | 15 | பஞ்சமி | ஞாயிறு | உத்தராடம் | தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம் 9ஆம் நாள். காலை திருமஞ்சனம்.<br>பின்பு தீர்த்தவாரி மாலை உள்புறப்பாடு, ஆஸ்தானம்.<br>கலியன் உத்ஸவம் 1 ஆம் நாள்..<br>மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ<br>R. ராஜகோபால் |
| 02.12.19 | 16 | ஷஷ்டி | திங்கள் | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு. கலியன் உத்ஸவம் 2 ஆம் நாள். மாலை ஆஸ்தானம் ஸேவாகாலம் | ச்ரவணம் உபயம்: ஸ்ரீ ஸ்ரீநிவாச ராஜகோபாலன் |
| 03.12.19 | 17 | ஸப்தமி | செவ்வாய் | அவிட்டம் | கலியன் உத்ஸவம் 3 ஆம் நாள்.மாலை ஆஸ்தானம் ஸேவாகாலம் | |
| 04.12.19 | 18 | அஷ்டமி | புதன் | சதயம் | கலியன் உத்ஸவம் 4 ஆம் நாள்.மாலை ஆஸ்தானம் ஸேவாகாலம் | |
| 05.12.19 | 19 | நவமி | வியாழன் | பூரட்டாதி | கலியன் உத்ஸவம் 5 ஆம் நாள்.மாலை ஆஸ்தானம் ஸேவாகாலம். | |
| 06.12.19 | 20 | தசமி | வெள்ளி | உத்தரட்டாதி | காலை தாயார் திருமஞ்சனம். மாலை: உள்புறப்பாடுகலியன் உத்ஸவம் 6 ஆம் நாள்.மாலை ஆஸ்தானம் ஸேவாகாலம் | ஸ்ரீ<br>R. ராஜகோபால் |
| 07.12.19 | 21 | தசமி (1.04) 6.26 AM / ஏகாதசி | சனி | ரேவதி | கலியன் உத்ஸவம் 7 ஆம் நாள்.மாலை ஆஸ்தானம் ஸேவாகாலம் | |
| 08.12.19 | 22 | ஏகாதசி (05.39) 8.16 AM | ஞாயிறு | அச்வினி | கைசிக ஏகாதசி. காலை. பெருமாள் – உத்ஸவர் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு.<br>கலியன் உத்ஸவம் 8 ஆம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஏகாதசி<br>ஸ்ரீ<br>M.V. ஸந்தானம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 09.12.19 | 23 | த்வாதசி (0918) 9.43 AM | திங்கள் | பரணி | கைசிக த்வாதசி – புராண படனம். கலியன் உத்ஸவம் 9 ஆம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம் | புராண படனம் உபயம்: ஸ்ரீ லக்ஷ்மி ராமபத்ரன் குடும்பதினர் |
| 10.12.19 | 24 | திரயோதசி | செவ்வாய் | கார்த்திகை | காலை பெருமாள், கலியன் திருமஞ்சனம். மாலை பெருமாள், கலியன் வீதிபுறப்பாடு. இரவு – பெருமாள், கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | கலியன் உத்ஸவம்: ஸ்ரீ C.S. பார்த்த ஸாரதி |
| 11.12.19 | 25 | சதுர்தசி | புதன் | கார்த்திகை (1.30) – 6.38 AM/ ரோஹிணி | திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், திருப்பாணாழ்வார் திருமஞ்சனம். மாலை பெருமாள், திருப்பாணாழ்வார் ஆஸ்தானம் வீதிபுறப்பாடு. இரவு: பெருமாள், திருப்பாணாழ்வார் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | P.D.R. ட்ரஸ்ட் – ஸ்ரீ P. ராகவன் |
| 12.12.19 | 26 | பௌர்ணமி | வியாழன் | ம்ருகசீர்ஷம் | பாஞ்சராத்ர தீபம். காலை – பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை – பொழுதுடன் திருஆராதனம். பின்பு பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு. இரவு தைலக்காப்பு | திருமஞ் சனம் ஸ்ரீ K.S. விஜயராகவன், C/O. ஸ்ரீ R. ராகவன். மாலை உத்ஸவம்: ஸ்ரீ N.S. வரதாச்சாரி |
| 13.12.19 | 27 | ப்ரதமை | வெள்ளி | ம்ருகசீர்ஷம் (03.33) 7.25AM / திருவாதிரை | திருக்கச்சி நம்பிகள் | |
| 14.12.19 | 28 | த்விதீயை | சனி | திருவாதிரை – 02.52 (7.25 AM) | ராமானுஜர் | |
| 15.12.19 | 29 | த்ருதீயை | ஞாயிறு | புனர்வஸு (1.05) – 6.26 AM / புஷ்யம் | குலசேகராழ்வார் | |
| 16.12.19 | 30 | சதுர்த்தி (1.46) / பஞ்சமி | திங்கள் | ஆயில்யம் | தனுர் ரவி 36.21 (8.33PM) தனுர்மாத ஆராதனம் | |

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:


# ராமாயணம் – சரணாகதி வேதம்

ஸ்ரீமதி ரமா ராகவஸிம்ஹன்

சரணாகதி என்பது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் தலையாய தர்மங்களில் ஒன்று. சரணாகத வத்ஸலனாம் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளே சாச்வதமானது என்பது ஆசார்ய அநுக்ரஹத்தினால் உண்டாகும் ஞானம். வேதங்களும் இதிஹாச புராணங்களும் ஆகமங்களும் சரணாகதியின் உயர்வினை ஐயம் திரிபற விளக்குகின்றன. கீதாசார்யனாக 'மாம் ஏகம் சரணம் வ்ரஜ!' என்று ஸாக்ஷாத் அந்த பரமாத்மனே ஸாதிக்கிறான்.

எம்பெருமானார் திருவாக்கின்படி, 'சரணாகதி' என்று அவனது திருவடிகளைப் பற்றிக் கொள்பவரிடத்தே ஸ்ரீமந்நாராயணன் வசப்படுகிறான். எல்லாவற்றையும் விட உயர்ந்ததான மோக்ஷத்தினையே அநுக்ரஹம் செய்ய வல்லவனாம் அந்தப் பரமனை வசப்படுத்துதல் ஒன்றே அனைத்தையும் அடைய லகுவான வழி என்று ஸ்வாமி தேசிகனும் ஸாதித்தருளுகிறார். அபயப்ரதான ஸாரத்தில் 'சரணாகதி வேதம்' என்று ஸ்வாமி தேசிகனால் கொண்டாடப்படும் ஸ்ரீமத் ராமாயணத்தில் பலவிதமான சரணாகதிகள் ஸேவையாகின்றன. சரணாகதி தத்வத்தினை ஆழமாக எடுத்துரைக்கும் இவற்றினில் மனம் லயித்து மகிழ்வோம்.

பல காண்டங்களாகப் பிரிக்கப்பட்ட ஸ்ரீராமனின் கதை தான் ராமாயணம். ஒவ்வொரு காண்டம் மூலமாகவும் ஸாமான்யருக்கும் சரணாகதியினைப் பற்றின தெளிவான ஞானம் உண்டாகும்படி செய்கின்றான் அந்தப் பரமன்.



**பால காண்டம்**

**தேவர்களின் சரணாகதி**

ராவணனை வதம் செய்ய வேண்டி தேவர்கள் 'ஸ்ரீமந்நாராயணனே கதி' என்று அவனது திருவடிகளில் சரணடைகின்றனர். முன்ஜென்ம கர்ம பலன்களை கழிப்பதற்கெனப் பிறவி எடுத்துள்ள அனைவருமே அசக்தர்களான தம்மால் முடியாத கார்யத்தினை பராக்ரம சாலியான ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் சரணடைந்து அதனை ஸாதித்துக் கொள்ளலாம் என்பது இங்கு தெளிவாகின்றது.

**ஸத்யவ்ரதனின் சரணாகதி**

ஸத்யவ்ரதன் என்பவன் ஸூர்ய வம்ச இளவரசன். அதர்மத்தின் ஸ்வரூபமாக வாழ்ந்த ஸத்யவ்ரதனை வசிஷ்ட முனிவரின் வாக்கிற்கேற்ப அவனது தந்தையான த்ரியருனி நாட்டை விட்டு வெளியேற்றி விடுகின்றான். ஒரு கட்டத்தில் தானும் வனவாசம் செல்கின்றான் மன்னன் த்ரியருனி. அந்த ஸமயந்தனில் தனது குடும்பத்தினை விட்டு நீங்கிக் காட்டில் கடுந்தவம் மேற்கொண்டிருந்த விச்வாமித்ர முனியின் தர்மபத்னிக்கும் குழந்தைகளுக்கும் அடைக்கலம் அளித்தான் ஸத்யவ்ரதன். தான் நாடு கடத்தப்படுவதற்கு முக்ய காரணமாக இருந்த வசிஷ்ட முனியின் மீது அவன் கொண்டிருந்த சினத்தினால் அவரது பசுவினைக் கவர்ந்து, அதனை வதைத்து விச்வாமித்ர முனியின் மனைவி மக்களுக்குப் புசிக்கக் கொடுத்தான். இதனையறிந்த வசிஷ்ட முனியானவர் ஸத்யவ்ரதனை, தகப்பனின் சாபத்திற்கு ஆளானது, பசுவினை வதைத்தது மற்றும் அதனை உண்டது ஆகிய மூன்று காரணங்களுக்காக ''த்ரிசங்கு என்ற பெயரினைக் கொண்டு சண்டாளனாகக் கடவாய்!'' என்று சபிக்கின்றார். தவம் முடிந்து திரும்பிய விச்வாமித்ர

ஸ்ரீ:

## ஸ்ரீ தேசிக மொழி

> எம்பெருமானுக்கு அமுதுசெய்விக்காதவை, அதிதிகளுக்கு அளிக்காமல் தானே உண்பவை, 'இந்த காலத்தில் இவை உண்ணத்தகாதவை' என்று விலக்கப்பட்டவை, கடையிலிருந்து வாங்கி அலம்பாமல் சமைத்த காய் முதலியன, சாஸ்த்ரங்களுக்கு புறம்பாக தீயவழியில் ஸம்பாதித்தவை, உண்ணத்தகாத வஸ்துக்களுடன் சேர்ந்து சமைத்தவை, ஆசாரமற்றவர்கள் சமைத்தவை, ஜலமலங்களுடன் ஸம்பந்தப்பட்டவை என்பதான ஆகாரங்கள் நாம் உண்ணாமல் விலக்கவேண்டியன.
>
> **- ஆகாரநியமம்**

முனியிடம் 'சரணாகதி' என்று தஞ்சமடைகிறான் ஸத்யவ்ரதன் தன்னிடம் சரணடைந்த காரணத்திற்காக விஸ்வாமித்ரர் திரி சங்குவிற்கு ஒரு ஸ்வர்க லோகத்தினையே படைத் தளிக்கின்றார். எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவர்கள் சரணாகதி செய்து கொள்ளும் தகுதியினை உடையவர்கள். அவர்கள் செய்யும் சரணாகதிக்கான பலன் அவர்களுக்கு உண்டு என்பதினை இந்தக் கதையானது தெளிவுபடுத்துகின்றது.

**அயோத்யா காண்டம்**

**இளையபெருமாளின் சரணாகதி**

திவ்யதம்பதிகளாம் பெருமாளும் பிராட்டியும் வனவாசம் மேற்கொள்ள வென அயோத்தி அரண்மனையினை விடுத்துக் கிளம்ப யத்தனிக்க, இளைய பெருமாளாம் லக்ஷ்மணன் அவர்களிடம் சரணடைகிறார். அவர்களது வனவாசத் தின் போது அவன் அவர்களுக்குச் செய்யக் கூடிய கைங்கர்யங்களை தனது சரணாகதியின் பலனாக பெருமாள் மற்றும் பிராட்டியிடமிருந்து இளைய பெருமாள் கேட்டுப் பெறுகிறார். சரணாகதி பண்ணுபவர்கள் தாங்கள் கேட்கும் பலனை அடைவர் என்பது இதிலிருந்து உணர்த்தப்படும் விஷயமாகும்.

**பரதனின் சரணாகதி**

பெருமாள் அயோத்தியின் ஸிம்ஹாஸனத்தினை அலங்கரிக்க வேணுமாய் பிரார்த்தித்து, சரணா கதி என்று பரதன் பெருமாளின் திருவடிகளில் தஞ்சமடைந்தான். சரணாகதிக்கென அவன் வேண்டிய பலனானது உடனே அவனுக்கு கிடைத் ததாவெனில் இல்லையென்றே சொல்ல வேண்டும். ஆனால் அவன் ஆசைப்பட்டதை விடவும் உயர்ந்ததான பெருமாளின் பாதுகையினை தனது சிரஸ்ஸினில் ஏந்தும் பாக்யத்தினை பரதன் பெற்றான். பிற்பாடு அவன் சரணாகதியின் பலனாகக் கேட்டது அவனுக்கு ப்ராப்தமாயிற்று. பெருமாள் அயோத்தியின் ஸிம்ஹாஸனத்தினை அலங்கரித்தார்.

நமது கர்ம வினைகளினால் சரணாகதிக்கான பலன் உடனே கிடைக்காவிட்டாலும், அதற்கான பலன் தகுந்த ஸமயத்தில் நம்மை வந்து சேரும் என்பதை பரத சரணாகதி உணர்த்துகின்றது. முன்பு சரணாகதி செய்த போது நாம் எதிர்ப்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்பதினால் மறுமுறை சரணாகதி பண்ண வேண்டாம். சரணாகத வத்ஸலனாகிய எம்பெருமான் நமது சரணாகதிக்கான பலனை தக்க காலத்தே அளித்துக் காப்பான்.

**ஆரண்ய காண்டம்**

**முனி ச்ரேஷ்டர்களின் சரணாகதி**

கொடிய ராக்ஷஸர்களிடமிருந்து தம்மைக் காக்க வேண்டி ஆரண்ய காண்டத்தில் முனி ச்ரேஷ்டர்கள் பலர் ஸ்ரீராமனிடத்தே 'ராமா காப்பாற்று! சரணாகதி' என்றனர். அவர்களுக்கு அபயம் அளித்த எம்பெருமான் அவர்களை அதர்மிகளிடமிருந்து ரக்ஷித்தான். தன்னிடம் அபயம் யாசித்து வந்த முனி ச்ரேஷ்டர்களுக்கு அபயம் அளிக்க அவர்கள் ஹோமமோ யாகமோ தபஸ்ஸோ செய்திருக்கின்றனரா என்று அவன் பார்க்கவில்லை. என்னே எம்பெருமானின் ஸௌலப்யம்! அவன் அவர்களிடத்தே கண்ட 'கார்பண்யம்' ('நான் சிறியவன். அசக்தன். பலமில்லாதவன்) என்ற குணமானது அவனை அவர்களுக்கு அபயம் அளிக்கச் செய்தது. 'இதைத்தான் தொண்டரடிப்பொடியாழ்வார் 'விதியிலா என்னைப் போல' (திருமாலை) என்று ஸாதித்தருள்கிறார்.

**கிஷ்கிந்தா காண்டம்**


**ஸுக்ரீவ சரணாகதி**

ஸுக்ரீவ சரணாகதி மிகவும் விசேஷமானது. ஸுக்ரீவன் பெருமாளிடம் அபசாரப்படுகிறான். பின்னர் இளைய பெருமாளாம் லக்ஷ்மணனிடம் சரணாகதி அடைந்து அவன் மூலம் பெருமாளின் அநுக்ரஹத்தினைப் பெறுகின்றான். ஸுக்ரீவ சரணாகதி நமக்கு தெளிவிப்பது, நமது துஷ்கர்ம பலன்களினால் நாம் பெருமாளிடம் அபசாரப்பட நேர்ந்தாலும், ஆசார்யன் போன்ற பாகவதோத்தமர்களிடம் சரணடைந்து, அவர்கள் மூலமாக பெருமாளிடம் அபயம் கேட்டு சரணடையலாம். இத்தகைய சரணாகதியினையும் பெருமாள் திருவுள்ள உகப்புடன் ஏற்கிறார்.

**ஸுந்தர காண்டம்**

**த்ரிஜடா சரணாகதி**

அசோக வனத்தில் அரக்க குலத்தில் ஜனித்தவளாம் த்ரிஜடா, பிராட்டியிடம் சரணாகதி செய்கின்றாள். அவள் தனக்கு மட்டும் சரணாகதி செய்யாமல் சுற்றியிருந்த மற்ற அரக்கிகளுக்கும் சேர்த்து பிராட்டியிடம் சரணாகதி செய்தாள். அந்த அரக்கியர்களுக்கோ,



சரணாகதி என்றால் என்னவென்றே தெரிந்திருக்க வில்லை. 'உங்களுக்கும் சேர்த்து நான் சரணாகதி செய்கிறேன்' என்று த்ரிஜடா அவர்களிடம் கூறிய போதும் அவர்களுக்கு ஏதும் புரியவில்லை. ஜகன்மாதாவான பிராட்டியோ அனைவருக்கும் அபயம் அளித்தாள். எதற்காக அவர்களுக்கும் சேர்த்து சரணாகதி செய்கிறேன் என்று த்ரிஜடா கூறுகையில், அந்த அரக்கியர் அதனை 'வேண்டாம்' என்று சொல்லவில்லையாம். பிராட்டி இதனை மட்டுமே கவனித்தாளாம். என்ன ஒரு வாத்ஸல்யம்! பிராட்டியின் திருவடிகளே சரணம்.

**யுத்த காண்டம்**

**விபீஷண சரணாகதி**

''ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே – அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம.'' தனது பார்யையான பிராட்டியைக் கவர்ந்து சென்று சிறை வைத்தவனாம் ராவணனின் தனயன் என்றும் பாராது, 'சரணாகதி' என்று தன்னிடத்தே வந்த விபீஷணனுக்கு அபயம் அளித்த பொழுதில் பெருமாள் தன் திருவாய் மலர்ந்து உரைத்த வாக்யம் இது. 'அபயம் என்று என்னிடத்தே வந்தவனை காப்பேன் என்ற வ்ரதம் பூண்டவன் நான்' என்பது அந்தப் பரப்ரஹ்மனே உரைத்த ஸத்யமான வார்த்தை. சரணாகதி என்று ஸ்ரீராமனிடத்தே வந்து சேர்ந்த விபீஷணனும், கீதா சார்யன் ''அநந்யாச் சிந்தயந்தோ மாம்'' என்பதற்கேற்ப, ராஜ்யம், பட்டம், பதவி, பந்துக்கள் என்று அனைத்தையும் துறந்து சரணாகத வத்ஸலனாம் ஸ்ரீராமனிடத்தே வந்து சேர்ந்தான். நமது ஆசார்ய சிரோன்மணிகள் மற்ற அனைத்து சரணாகதிகளை விடவும் விபீஷண சரணாகதிக்கு மிகுந்த முக்யத்வம் அளித்துள்ளனர் என்பதே அதன் ஏற்றத்தினை பறைசாற்றுவதாக அமைகின்றது.

எள்ளளவும் அவநம்பிக்கை கொள்ளாது ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளை மட்டுமே பற்றிக் கொள்வதே சரணாகதி ஆகின்றது. இதையே ''கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்' என்று பெரியாழ்வார் திருப் பல்லாண்டில் ஸாதிக்கின்றார். 'ஸ்ரீமந்நாராயணன் தான் பரதேவதையா? அல்லது அவனை விட உயர்ந்த தேவதை ஒன்று உண்டா?' என்ற குழப்பம் கொண்டவரை எங்கள் குழுவில் சேர்க்க மாட்டோம் என்பது இதன் பொருளாகிறது.

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்தங்களும் புராணங்களும், 'மா சுச' என்ற அவனது வாக்கிற்கிணங்க, சரணாகத ரக்ஷகனாக விளங்கும் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளே சரணம் என்றிருப்பது தான் ஸ்வரூபம் என்கின்றன. எம்பெருமான் திருவடிகளே சரணம் என்றிருப்போம். அவனையே உபாயமாகக் கொண்டு உபேயமாகிய அவனைச் சென்றடைவோம்.









திருப்பவித்ர உத்ஸவம்











திருப்பவித்ர உத்ஸவம்



ஸ்ரீ:

கண்ணுக்கினியன












திருப்பவித்ர உத்ஸவம்











திருப்பவித்ர உத்ஸவம்














தீபாவளி உத்ஸவம்



ஸேனை நாதன் திருநக்ஷத்ரம்

பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்




ஸ்ரீ:







↑ பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்


பேயாழ்வார் திருநக்ஷத்ரம் ↓











பேயாழ்வார் திருநக்ஷத்ரம்







ஸ்ரீ:

# மண்மகள் வைபவம்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

*ப்ரளயோதந்வத் உத்தீர்ணாம் ப்ரபத்யேஹம் வஸுந்தராம் |*
*மஹாவராஹ தம்ஷ்ட்ராக்ர மல்லீகோச மதுவ்ரதாம் ||*

*ஸங்கல்ப கல்ப லதிகாம் அவதிம் க்ஷமாயா:*
*ஸ்வேச்சா வராஹ மஹிஷீம் ஸுலபாநுகம்பாம் |*

*விச்வஸ்ய மாதரம் அகிஞ்சந காமதேநும்*
*விச்வம்பராம் அசரண: சரணம் ப்ரபத்யே ||*

ஸ்ரீமந்நாராயணனின் திவ்ய மஹிஷிகளில் பெரிய பிரட்டியாருக்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ளவள் பூமிப்பிரட்டியார். அப்பிராட்டியின் வைபவத்தை அடியேனுக்கு எட்டிய வரையில் இங்கு தெரிவிக்க முயல்கிறேன்.

**வேதத்தால் மங்களாசாஸனம் செய்யப்பட்டவள்**

வேதம் ஒருபுருஷனால் உருவாக்கப்பட்டதன்று. பகவானால் ப்ரஹ்மாவுக்கு இந்த உலகைப் படைத்து அவ்வுலகிற்கு நன்மை பயக்கப் போதிக்கப்பட்டது. பூமிப்பிராட்டியாரைப் பற்றி வேதத்தின் பல சாகைகளான (பிரிவுகளான) ருக் வேதமும் தைத்திரிய ஸம்ஹிதையும் சதபத ப்ராஹ்மணமும் அருமையாகப் போற்றுகின்றன.

பஞ்சஸூக்தம் என்று எல்லோராலும் அநுஸந்திக்கப் படுபவற்றில் ''பூஸூக்தம்'' மிகவும் போற்றப்படுவ தாகும். இதில் பூமிப்பிராட்டி ஸகல ஸம்பத்துக்களுக்கும் அதிஷ்டான தேவதை என்றும், அந்த பிராட்டியின் ஆகாரம் பலவாறு விரிந்து பரந்து கிடக்கிறது என்றும், அவள் எல்லையில்லாக் கருணையுள்ளவள் என்றும் தம்மை அடைந்த அனைத்து ஜீவராசிகளுக்கும் கருணையைப் பொழிபவள் என்றும் போற்றுகிறது.

மேலும் அவனிமகளானவள், மேதீநீ தேவி, வஸுந்தரா, வஸுதா, வாஸவி, ஸமுத்ரவதீ, ஸாவித்ரீ, மாதவீ, மாதவப்ரியா என்றும் திருநாமங்களையுடையவள் என்றும் அந்தப் பிராட்டியே நம்முடைய நாவில் வாஸம் செய்து நன்மை பயக்கச்செய்யவேண்டும் என்றும், பகவான் உபேந்த்ரனாக அவதரிக்கும் பொழுது அவளும் அவதரித்தவள் என்றும் நமக்கு ஸகல கார்யங்களும் ஸித்திக்க வேண்டுமானால் அச்யுத வல்லபையான பூமிப்பிராட்டியாரையே நாம் உபாஸிக்க வேண்டும் என்றும் பூஸூக்தம் நமக்கு மண்மகளின் பெருமையை காட்டிக்கொடுக்கின்றது.

**புராணங்களில் பூமிதேவி**

ஸ்ரீமத்பாகவதம் மூன்றாவது அத்யாயத்தில் ஸ்ரீவராஹப் பெருமானின் அவதாரவிசேஷம் வர்ணிக்கப்படுகிறது. ப்ரஹ்மாவால் படைக்கப்பட்ட ஸ்வயம்பு மநு



என்பவர் தர்மங்களை அநுஷ்டிக்கும் இடமான பூமிப் பிரட்டியாரின் அதிஷ்டானமான அவனி எங்கே என்று வினவுகிறார். அப்பொழுது சிந்தனையில் ஆழ்ந்த ப்ரஹ்மாவின் மூக்கு த்வாரத்திலிருந்து ஒரு கட்டைவிரல் அளவில் சிறிய பன்றி ஒன்று வெளிப் பட்டது. தாம் அவதரித்தவுடனேயே அந்தப் பன்றி மிகவும் பெரிய உருக்கொண்டு ஆகாசம் வரையில் நீண்டு மேகக்கூட்டங்களைக் கலைத்து அட்டஹாஸத் துடன் ஸமுத்ரத்தில் குதித்து பூமிப்பிரட்டியார் மறைத்து வைக்கப்பட்ட இடத்தைத் தேடியது.

மிகவும் பலமுடையவனும் தனக்கு எதிர்த்து சண்டையிட ஒருவருமில்லை என்று அஹங்காரத்தால் பீடிக்கப்பட்டவனுமான ஹிரண்யாக்ஷன் என்ற அஸுரன் அப்பன்றிவுருக்கொண்ட எம்பெருமானிடம் சண்டையிட்டான். இருவருக்கும் கடும்போர் மூண்டு முடிவில் அஸுரனை வீழ்த்தினார் கோலவராஹன். பின்பு பொறுமையே வடிவான பூமிப்பிராட்டியாரை மீட்டு அனைத்து ஜீவராசிகளும் தம்தம் தர்மங்களைக் கடைப்பிடிக்கும் வண்ணம் எழுந்தருளப்பண்ணி பூமிதேவியை அநுக்ரஹித்தருளினார். ப்ரஹ்மாதி

தேவதைகள் எம்பெருமானின் வராஹ அவதாரத்தை மிகவும் போற்றி தங்களுக்கு அருள்புரிய வேண்டி ப்ரார்த்தித்தனர்.

யாக யஜ்ஞங்களில் உபயோகப்படும் அனைத்து ஸாதனங்களும் அந்த வராஹப்பெருமானின் திருமேனியில் ஒவ்வோரு அங்கத்தின அம்சமாகும் என்று போற்றுகிறது பாகவத புராணம்.

மேலும் மஹரிஷி வேதவ்யாசர் தொகுத்த ஸாத்விக புரணங்களில் வராஹ புராணம் மிகவும் பரஸித்தி பெற்றது. இந்தப் புராணமும் பூமிப்பிராட்டியின் பெருமையையும் வராஹப்பெருமானின் திருஅவதாரத் தையும் மிகவும் விஸ்தாரமாகக் கூறுகிறது. பிராட்டியும் பெருமாளும் கலந்துரையாடும் கட்டமும் மிகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**வராஹ சரம ச்லோகம்**

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வராஹ, ராம மற்றும் க்ருஷ்ணாவதாரங்களில் பகவான் திருவாய் மலர்ந்தருளிய சரம ச்லோகங்கள் மிகவும் பெருமை வாய்ந்தவை. அவற்றுள் முதன்மையானது



ஸ்ரீவராஹநயினார் அருளிய வராஹபுராணத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு ச்லோகங்கள். ஸ்வாமி ஸ்ரீதேசிகன் இந்த சரம ச்லோகத்தின் உரையான 'ரஹஸ்ய சிகாமணி' என்னும் க்ரந்தத்தின் மூலமாக இந்த வராஹபுராணத்தின் மேன்மையையும் அதையருளிய வராஹப்பெருமானின் ஏற்றத்தையும் விவரித்தருளுகிறார்.

சகல சேதந வர்கங்களும் இப்பூவுலகில் ஜனன மரணங்களினால் பீடிக்க பட்டிருப்பதை கண்ட கருணையே வடிவான பூமிப்பிராட்டி தம்முடைய பர்த்தாவான வராஹப்பெருமாளிடம் அந்த சேதன வர்கங்கள் நல்ல கதியடைவேண்டிய வழியைக் கூறுமாறு ப்ரார்த்திக்கிறாள். இதன் பயனாகவே அந்த வராஹபகவான் திருவாய்மலர்ந்தருள, பூமிப்பிராட்டி திருச்செவி ஸாதிக்க, இந்த சரம ச்லோகம் மலர்ந்தது.

பெரியபிராட்டியார் தம்மை அண்டியவர்களிடம் உள்ள குற்றங்களைக் கண்டு துயரப்பட்டு எம்பெருமானிடம் சிபார்சு செய்து அவர்களை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறாள். ஆனால் பொறுமையே உருவான பூமிப்பிராட்டியின் கண்களுக்கு, சேதனர்களிடம் உள்ள குற்றங்கள் புலப்படுவதேயில்லை. ஆகையால் இவள் எம்பெருமானைக் காட்டிலும், பெரியபிராட்டியாரை காட்டிலும், மிகவும் மேம்பட்டவள் என்று ஸ்வாமி தேசிகன் இவளுடைய பெருமையைப் போற்றிப் புகழ்கிறார்.

**ஸ்ரீ வராஹப்பெருமான் அருளிய ச்லோகங்கள்**

*ஸ்திதே மனஸி ஸுஸ்வஸ்தே சரீரே சதியோ நர: |*
*தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்தா விச்ரூபம் ச மாமஜம் ||*

*ததஸ்தம் ம்ரியமாணம்து காஷ்டபாஷாணஸங்நிபம் |*
*அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பராமாம் கதிம் ||*

**இவற்றின் திரண்ட பொருள்**

''மனம் நேரிய நிலையிலும் சரீரம் நல்ல நிலையிலும் இருக்கும் வேளையில் சரீரத்தில் தாதுக்கள் ஸமமாக இருக்கும்போது உலகை சரீரமாகக் கொண்டவனாய் பிறவி முதலிய இழிவான தன்மைகளற்றவனான என்னைக் குறித்துப் ப்ரபத்தி செய்பவன், மரண காலத்தில் கல்லையும் கட்டையையும் போலக் கிடக்கும்பொழுது அந்நிலையில் என் பக்தனான அவனுக்கு ஒருகால் என்னைப் பற்றிய நினைவு அவனது முயற்சியால் வராவிடினும் அவனுக்கு அருள்புரியும் நினைவை நானே கொண்டு என் ஸ்தாநமாகிய பரமபதத்துக்கு அழைத்துச் செல்வேன்'' என்றருளிகிறார் ஏனமாய்நிலம் கீண்டவன்.

**ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் பூமிப்பிராட்டியார்**

நம்மாழ்வார் திருவாய்மொழியில் முனியே நான்முகனே என்னும் பதிகத்தில் ஏழாம் பாசுரத்தில் எம்பெருமான் எவ்வாறு பூமிப்பிராட்டியாரை அஸுரனிடம்



கடலினிருந்து மீட்டாரோ அந்தப் பிராட்டியினிடம் பக்திகொண்ட தம்மை இந்த ஸம்ஸாரமாகிய கடலிலிருந்து கர்மங்களாகிற அஸுரனிடமிருந்தும் கோலவராஹப் பெருமான் காக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார்.

கோதாபிராட்டியாரும் தம்முடைய திருமொழியில் நெடுநாட்களாக ஹிரண்யாக்ஷன் என்ற அஸுரன் ஸமுத்ரத்தில் ஒளித்து வைத்ததன் விளைவாக ஸுகுமாரமான திருமேனியெல்லாம் பாசிபடர்ந்து விளங்கிய பூமிப்பிராட்டியின் மேல் இருந்த காதலினால் பெரிய வராஹ அவதாரம் கொண்டு அவ்வஸுரனை வதம் செய்து அவளை மீட்டான் என்று பூமிப்பிராட்டியின் பால் எம்பெருமானுக்குள்ள வ்யாமோஹத்தை அநுபவிக்கிறாள்.

அடியவர்களின் பிழைகளைக் கணிசியாது அவர்கள் செய்த குற்றங்களை நற்றமாக எம்பெருமான் எண்ணும்படி பரிந்துரைக்கிறாள் பெரிய பிராட்டியார். பூமிப்பிராட்டியோ, அவர்களின் அபாரதங்களை பொறுத்துக் கொண்டு அவர்களை அநுக்ரஹிக்குமாறு எம்பெருமானிடம் வேண்டுகிறாள். எப்பொழுதும் எம்பெருமானைப் பிரியாது ஆட்செய்யும் பிராட்டி மார்களின் சேர்த்தியில் அவன் திருவடியில் சரணாகதி செய்வதாக மங்களாசாஸனம் செய்கிறார் திருமங்கையாழ்வார்.

**ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் திருவாக்கில்**

ஸ்வாமி ஸ்ரீதேசிகன் எம்பெருமானின் பிராட்டி மார்களான பெரியபிராட்டியாரைப் பற்றியும், பூமிப் பிராட்டியாரைப் பற்றியும், கோதைப்பிராட்டியாரைப் பற்றியும் மூன்று ஸ்தோத்ரங்களைக் கொண்டு போற்றுகிறார்.

அவற்றுள் பூஸ்துதியில் பூமிப்பிராட்டியின் அருமை பெருமைகளைக் கூறி அவளின் திருவடியில் ப்ரபத்தி செய்து தம்முடைய பக்தியை வெளிப்படுத்துகிறார்.

இந்தத் துதிகளில் பூமிப்பிராட்டியின் பெருமை நம் வார்த்தைகளால் போற்றப்படமாட்டாது என்றும், பூமிப்பிராட்டியினால் பகவானுக்குப் பெருமை மிகுவதாகவும், இந்த லோகம் பூமிப் பிராட்டியாலேயே போஷிக்கப்படுவதாகவும், பூமிதேவி உலகில் உள்ள எல்லா தத்வங்களுக்கும் எல்லைநிலமாக விளங்குவதாகவும், நிலமகளின் கருணையினாலேயே இந்த பூமி செழிப்புடன் இருப்பதாகவும், மிகவும் கொடிய பாபத்தைச் செய்த பாபிகளையும் பகவானிடம் அணுகுவிப்பதாகவும், வராஹப்பெருமான் பூமிப்பிராட்டியிடம் மிகவும் காதல் கொண்டவன் என்றும், இம்மையிலும் மறுமையிலும் எல்லாப் பயன்களையும் அளிப்பவள் என்றும், எல்லா யோகிகளின் த்யானத்திற்கும் பூமிப்பிராட்டி இலக்கானவள் என்றும், அவள் அனைத்துச் செல்வங்களையும் நமக்கு அளிப்பவள் என்றும் பலவாறு கொண்டாடுகிறார்.

## கார்த்திகையில் முக்கிய உத்ஸவங்கள்

**தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம்**
நவம்பர் 23 (சனி) முதல்
டிஸம்பர் 1 (ஞாயிறு) வரை (9 நாட்கள்)

**தீர்த்தவாரி**
டிஸம்பர் 1 (ஞாயிறு) காலை

**கலியன் உத்ஸவம்**
டிஸம்பர் 1 (ஞாயிறு) முதல்
10 (செவ்வாய்) வரை (10 நாட்கள்)

**கைசிக ஏகாதசி**
டிஸம்பர் 8 (ஞாயிறு)

**கைசிக த்வாதசி**
டிஸம்பர் 9 (திங்கள்)

**கலியன் சாற்றுமுறை**
டிஸம்பர் 10 (செவ்வாய்)

**திருப்பாணாழ்வார் சாற்றுமுறை**
டிஸம்பர் 11 (புதன்)

**திருக்கார்த்திகை தீப உத்ஸவம்**
டிஸம்பர் 12 (வியாழன்)

## ஸ்ரீ தேசிக மொழி

எம்பெருமானால் வதம் செய்ய விரும்பப்பட்டவர் பகைவராயினும் அவனுடைய திருமேனியும் பராக்ரமமும் அந்த பகைவர்களின் கண்களையும் மனத்தையும் வசீகரிக்கும் இனிமையான தன்மையே மாதுர்யம் எனப்படும் குணம்.

**- கத்ய பாஷ்யம்**

இவ்வளவு பெருமை வாயந்த பூமிப்பிராட்டியாரை நாம் தினமும் தொழுது நாம் அப்பிராட்டியின் கருணைக்கு இலக்காவோம்.

**பூமிதேவியின் த்யான ச்லோகம்**

*பத்யுர் தக்ஷிண பாணிபங்கஜ புடே விந்யஸ்த பாதாம்புஜா*
*வாமம் பங்நக ஸார்பௌம ஸத்ருசம் பர்யங்கயந்தீ புஜம் |*

*போத்ர ஸ்பர்ச லஸத் கபோல பலகா புல்லாரவிந்தேக்ஷணா*
*ஸா மே புஷ்யது மங்களாங்யனுதிநம் ஸர்வாணி ஸர்வம்ஸஹா ||*

**கைசிக புராணத்தின் ஏற்றம்**

தினங்களிலேயே ஏகாதசியும் த்வாதசியும் விஷ்ணுவிற்கு ஏற்ற தினங்களாகக் கொண்டாடப்படு கின்றன. ஒவ்வொரு ஏகாதசியன்றும் உபவாஸத்தை அநுஷ்டித்து த்வாதசியில் பாரணை மேற்கொண்டால் வரும் பலன்களை பலபுரணாங்களும் மிகவும் உயர்த்தியாகக் கூறுகின்றன.

அவ்வகையில் கார்த்திகை மாதத்தில் சுக்ல பக்ஷத்தில் ஸம்பவிக்கும் கைசிக ஏகாதசி மற்றும் த்வாதசி பலவிதமான ஏற்றங்களை உடையவை. குறிப்பாக, கைசிக த்வாதசியன்று பகவத் ஸந்நிதிகளில் வாசிக்கபடும் வராஹபுராணத்தில் உள்ளடங்கியதான 'கைசிக மாஹாத்ம்யம்' பலபெருமைகளை உடையது.

கருணையே வடிவான பூமிப்பிராட்டியார் இந்த லோகத்தில் வசிக்கும் சேதனர்கள் உஜ்ஜீவிக்கும் வழியை ஸ்ரீவராஹப்பெருமானிடம் கேட்க, அதற்கு அவன் விடையருளியதன் பயனாக இந்த மாஹாத்ம்யம் அவதரித்தது. இதற்கு ஸ்ரீபராசரபட்டர் மிகவும் அழகான உரையொன்றை அருளிச்செய்திருக்கிறார்.

## ஸ்ரீ தேசிக மொழி

மைக்குவியல், கம்பீரமான கடல், நின்றாடு கனமயில், நீரைப்பொழியும் மேகம், நீலரத்னங்கள், கருநெய்தற்பூ ஆகியவை போன்று திருமேனியுடைய தேவநாதனே! உன்னைச்சரணடைந்தேன். முன் திருக்கையிலுள்ள திருவாழியினால் முதலை வாய்ப்பட்ட களிற்றைக் காத்ததுபோல் என் அந்திமகாலத்தில் யமதூதர்கள் வந்து என்னை இழுத்துச்சென்று வேதனை செய்யாதபடி அபயம் அளித்துக் காத்தருள்வாயாக.

**- நவமணிமாலை**

### நம்பாடுவான் சரித்ரம்

நம்பாடுவான் எனும் பக்தன் ஒவ்வொரு நாளும் திருக்குறுங்குடி என்னும் திவ்யதேசத்தில் வீணையைக்கொண்டு பலராகங்களில் எம்பெருமானைக் குறித்து பக்திப்பரவசத்துடன் கானம் செய்வான். ஒரு கைசிக ஏகாதசியன்று இரவில் பகவத் ஸந்நிதி செல்லும் வழியில் ப்ரஹமராக்ஷஸ் ஒன்று அந்த நம்பாடுவானைக் கைதுசெய்து தான் அவனை உண்ணப்போவதாகத் தெரிவித்தது.

நம்பாடுவான் தான்தினமும் எம்பெருமானின் ஸந்நிதியில் கானம் செய்து வருவதாகவும், த்வாதசியன்று தாம் கைசிக பண் எனும் பண்ணை வைத்துப் பாடுவதாகவும் அந்தப் பலனை பகவானிடம் பெற்றுக்கொண்டபின்பு மீண்டு ப்ரஹமராக்ஷஸ்ஸுக்கு உணவாகுவதாகவும் எனவே தன்னை விடுவிக்கவேண்டும் என்றும் ராக்ஷஸ்ஸை குறித்து கூறுகிறான். ப்ரஹ்மராக்ஷஸ்ஸிடம் விடுபட்ட யாராவது திரும்பி வரக்கூடுமோ என்று அச்சித்த ராக்ஷஸ், நம்பாடுவானின் கூற்றை ஏற்க மறுத்தது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக நம்பாடுவான் பதினெட்டுவிதமான பாபங்களைக்கூறி தான் ப்ரஹ்மராக்ஷஸ்ஸிடம் திரும்பி வரவில்லை என்றால் அந்த பாபங்கள் தன்னை அடையட்டும் என்று சத்தியம் செய்கிறான். அதைக்கொண்டு ராக்ஷஸ்ஸும் அவனை விடுவிக்க அவன் கைசிகப்பண்ணைப் பாடி மீண்டும் ப்ரஹ்மராக்ஷஸ் இருக்குமிடம் அடைகிறான். அவனைக் கண்டு அதிசயித்த ராக்ஷஸ்ஸும், தன் பாபம் நீங்கி க்ஷேமமடைய அந்த நம்பாடுவானின் காலில் விழுந்து அந்த கைசிகப் பண்ணின் பலனை தனக்குக் கொடுக்குமாறு வேண்ட அவனும் அந்த கீதபலத்தை கொடுக்க அந்த ராக்ஷஸ்ஸும் எம்பெருமானின் கருணையினாலே நற்கதியடைந்தது.

யாவனொருவன் கார்த்திகை மாதத்து சுக்ல பக்ஷ த்வாதசியன்று நம்முடைய திருமுன்பு கைசிக மஹாத்ம்யத்தை வாசிக்கிறானோ கேட்கிறானோ அவர்கள் எப்பொழுதும் நம்மைப் பல்லாண்டு பாடிக்கொண்டும் நம்மை அநுபவித்துக் கொண்டும் இருப்பார்கள் என்று பூமி நாச்சியாரைப் பார்த்து வராஹப்பெருமான் இந்த கைசிக மாஹாத்ம்யத்தின் பலனை அருளிச்செய்கிறான்.

இந்த வருடம் 09.12.2019 கைசிக த்வாதசியன்று நம் ஸந்நிதியில் அநுஸந்திக்கபடும் கைசிக மாஹாத்ம்யத்தை நாமும் செவிசாற்றி, பூமிப்பிராட்டியார் மற்றும் வராஹப்பெருமானின் கருணைக்கு இலக்காவோம்.

# 3. Sri Bhagavath Dhyana Sopanam

Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Swami Desika at his descriptive best. This surely would be the refrain when one gets to study Sri Bhagavath Dhyana Sopanam which extols the beauty of Ranganatha, the Lord of Srirangam.

Perhaps, inspired by Thiruppaan Azhwar's Amalanaadhi Piran – this is a well-founded inference – our Acharya set about composing his own Sanskrit version of Arangan's Thirumeni varnanam (description of His form) on similar lines. So we have this hymn Bhagavath Dhyana Sopanam, offering us a rewarding journey from the Lord's Thiruvadi to Thirumudi (feet to crown).



That Sri Desika has written a commentary by name Munivaahana Bhogam, on “Paadhadhi Kesamadhai Paadi thantha” Amalanaadhi Piran, is a matter of signifcance and a cinch for the aforesaid inference.

The sheer nature of the subject lends itself to descriptive treatment and who better than our great Acharya to take it to exquisite and exalted levels – literally and fguratively!

Sopanam means 'fight of steps'. Starting from the feet, the author takes the ardent devotee through the fight of steps in the form of various parts of the Lord's Sacred Form, in the ascending order. It may be noted that Thiruvadi in our Sampradaya is held as means (Upaayam) and one must, frst up, catch hold of the same in order to invoke His grace.

After the customary prefatory Sloka, verses 2 to 9 meditatively ‘cover’ His lotus feet, stunning ankles, wonderful thighs, attractive navel, famed chest (because of the presence of Lakshmi), imposing arms, smiling face and radiant crown in that order. The crescendo thus culminates in a 'face to face' with the Lord.

Sloka No. 2 offers a fascinating study of comparison between the metaphorical lotus (His feet) and an ordinary lotus. It shows that the Divine Lotus is conclusively superior on many counts. To name a few:-

Unlike its poor cousin, the Divine Lotus

- is the home to the fragrance of the Vedas;
- is the fbwer worn on the head by Brahma Devas;
- is not an off-shoot of slush but born from the sacred Kaveri sand;
- is softer than even Piraatti's (lotus) hands.

Sloka No. 10 sums up His overall beauty, while 11 narrates the elegance of the Uthsavar – Namperumal.

A word-play (on Madhye – Centre) in the 11th Sloka provides for an absorbing fnishing touch prior to the Phala Sruti. Swami says, “Not only does He, along with His consorts, stay put in the centre of Srirangam but also in the interior of my heart” - Madhye Rangam, Mama Cha Hridhaye Varthathe Saavarodha:.

A couple of references can be drawn as pointers as to why Ranganatha, of all the Idols (Archaa Moorthis), was a natural choice when Sri Desika contemplated adoring the Divine elegance.

Sri Andal and Thiruppaan Azhwar can not help but exclaim in ecstasy at the breathtaking beauty of ‘Arangan’.

In 'Ezhiludaiya Ammanaimeer' – Naachiyar Thirumozhi (11-2) – Andal addresses “O Bright Ladies!” and goes on “My sweet Lord Arangan has beautiful locks (of hair), beautiful lips, beautiful eyes, and a beautiful lotus on his navel.” – beauty personifed, in a nutshell.

And Thiruppaan Azhwar exclaims: “Neelameni Aiyo!” – “He wears a beautiful gem-set garland and a necklace of pearls on his dark frame... Aho, His matchless beauty has stolen my heart”. – Amalanaadhi Piran (9).

In the Phala Sruti, the great Acharya says that this hymn is a perfect prescription for those who wish to possess unswerving devotion to God and to attain the spiritual heights that great sages have done.

***To be continued...***

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸுந்தரராஜன்:** பாட்டீ! குமார வரதாசாரியர் 'வேதாந்தாசார்ய மங்கள' ஸ்தோத்ரத்தில 12-வது ச்லோகத்திலே, தனக்கும்-ஸ்வாமி தேசிகனுக்கும் ஆறு விதமான உறவு உண்டு-ன்னு ஸாதிச்சதில, நாலை விளக்கினேள்; மத்த ரெண்டச் சொல்லுங்களேன்.

**பங்கஜம் பாட்டீ:** சொல்றேன்; 'என்னைப் பெத்தவராய், எனக்கு உபநயனம் செய்வித்தவராய், நல்லாசிரியராய், ஸ்வாமியாய்' இருப்பவர் – அப்படீன்னா-ரோல்யோ! மேலே, ஐந்தாவதா 'சென்று அடையும் இலக்கு'-ங்கறார்.

லோகத்தில, மனுஷ்யனா பொறந்த ஒவ்வொருத்தர்க்கும் ஒவ்வொரு குறிக்கோள் இருக்கணும்; இல்லாட்டா பசு-பக்ஷி போல ஆயிடுவான். தன்னை எப்படிப்பட்டவனா நெனச்சிண்டிருக்காளோ, அதுக்கு ஏத்தமாதிரிதான் அவா விருப்பமும் இருக்கும். இதுக்கு ஒரு ச்லோகம் இருக்கு – பொறந்தவாளுக்கு சாப்பாட்டுலேயும்; தேவதைகளுக்கு அம்ருதத்திலேயும்; நாய்-மிருகத்துக்கு எச்சில்- புல் இவத்திலேயும்; ஸ்வாமி மாதிரி இருக்கறவாளுக்கு எம்பெருமானுக்கு எப்போதும் தாஸனா இருக்கணும்-ங்கறத்திலேயும் விருப்பம் இருக்கும்-ன்னு. இந்த தன்மையத்தான் ஸ்வாமி, 'ஆத்மாபிமான அநுகுண புருஷார்த்த வ்யவஸ்தை' அப்படீங்கறார். வார்த்தையக் கேட்டு மிரளாதே! அர்த்தம்தான் சொல்லிட்டேனே!! ஸ்வாமிதான் 'யோக்யர்- ப்ராஜ்ஞர்- ச்ரேஷ்டர்-பவ்யர்' அப்படீன்னு பலபடியா கீழே ஸ்தோத்ரம் பண்ணப்பட்டாரே! அந்த பவ்யதைக்கு – சேஷத்வத்துக்கு - ஏத்தா மாதிரி, 'எம்பெருமானுக்கே ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேணும்' அப்படீன்னு ஆசைப்படுபவர்-னு சொல்றார்.



இத்தையே வரதாசார்யர், 'அந்த கைங்கர்யத்த, தான் ஸ்வாமிக்கு எப்போதும் செய்து கிடக்கணும்-ன்னு' குறிக்கோளோட இருந்ததாலே, ''ப்ராப்யாய'' அப்படீன்னு குறிப்பிடறார்.

**ஸுமதி:** பாட்டீ! பெருமாள் கிட்ட சேஷனாயிக்க ஆசைப்படறது ஸரி; இவர், தேசிகர் கிட்ட-ன்னா சொல்றார்?

**பங்கஜம் பாட்டி:** ஆமாம்மா. இதுக்கும் வழிகாட்டி தேசிகனேதான் – 'குருக்கள் குழாங்கள் குரைகழற்கீழ் மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே'-ன்னு சொல்லிக்குடுத்திருக்காரே.

**ஸுந்தரராஜன்:** புரிஞ்சிது பாட்டி! அந்த கைங்கர்யத்த வரதாசாரியர் பெற்றாரா? அதுக்கு என்ன பண்ணார்?

**பங்கஜம் பாட்டி:** கடைசியா வரதாசார்யர் அதத்தான் சொல்றார் – 'ப்ராபகாய'- அடைவிப்பவர்ன்னு. அதாவது, 'ஏழை, ஏதலன்'-னு இருக்கும் தான் எந்த உபாயத்தையும் செய்ய முடியாதவனா இருப்பதாலே, ஸ்வாமியே தன்னடைய க்ருபையினாலே தன்னைப் பெறச் செய்தார், அப்படீங்க்றார். இது ந்யாஸ தசகத்திலே 'ஸ்வாமி ஸ்வசேஷம் ஸ்வவசம் ஸ்வபரத்வேன நிர்பரம்; ஸ்வதத்த ஸ்வதீயா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மின் ந்யஸ்யதி மாம் ஸ்வயம்'-ன்னு ஸ்வாமி ஸாதிச்சதை ஒட்டியதாம். இவ்வளவால் வரதாசார்யர் தாம், அஹங்காரம்-மமகாரம் என்ற 'இருபசை அறுத்து' நிற்பதைக் காட்டுகிறார்.

**கடைசி ச்லோகம்:**

*ய: க்ருதம் வரதார்யேண வேதாந்தாசார்ய மங்களம் |*
*ஆசாஸ்தே அனுதினம் ஸோபி பவேங் மங்கள பாஜனம் ||*

**இதுக்கு பொருள்:** 'வரதாசார்யதாஸனால் வேதாந்தா சார்யரின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்பட்ட இந்த மங்கள ஸ்தோத்ரத்தை எப்போதும் அநுஸந்திப் பவர்க்கும் எல்லா நன்மைகளும் உண்டாகும்'.

## ஸ்ரீ தேசிக மொழி

பாகவதர்கள் எம்பெருமானின் திருவாரதனத்திற்கு உரிய வஸ்துக்களை ஸம்பாதிக்கும்போது தர்மமார்கத்திலிருந்து பிறழ்ந்த ஒருவன் எவ்வாறு நெருங்கி வேண்டினாலும் அவனிடம் இருந்து ஒரு வஸ்துவையும் பெறமாட்டார்கள். நேர்மையற்ற வஸ்துக்களை ஸம்பாதிக்கமாட்டார்கள். எனவே சாஸ்த்ரம் கூறிய வழியில் பகவதாராதனத்திற்குரிய வஸ்துக்களை சேர்த்தலே உபாதானம் எனப்படும்.

**- வைஷ்ணவ தினசரி**

'பயனை அறிந்துகொள்ளாமல் எவனும் ஒரு செயலில் இறங்கமாட்டான்' எனும் மூதூரைக்கு ஏற்பவும், கவிகளின் மரபை அநுஸரித்தும், முடிவில் நூற்பயன் கூறுகிறார். அதாவது வரதாசார்யர், தன் தகுதிக்குத் தக்கவாறு ஒரு ஸ்தோத்ரத்தை வாசிக கைங்கர்யமாக ஸமர்ப்பித்தார். அந்த அளவுக்குத் தகுதி இல்லையேல், இந்த ஸ்தோத்ரத்தை தினந்தோறும் ஆதரித்து ஓதுமவர்க்கும் ''முடியிடை நேர்படும் தூப்புல் அம்மான் பதமாமலரே'' என்கிறார்.

இதனை நமக்குச் செய்த உபதேசமாகக் கருதி பின்பற்றுவோமாக.

*கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலிநே |*
*ச்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ||*

குழந்தைகள் இருவரும் ஸேவிக்கிறார்கள்; பாட்டி 'வேங்கடேசோ ரக்ஷது' என அநுக்ரஹிக்கிறார்.

**மங்களம்**


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:



*With Best Compliments from:*

# Sridhar Parthasarathy & Family,

**Luz Church Road,**

**Mylapore, Chennai 600004.**

**SVDD thanks Sri Sridhar Parthasarathy & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam



